1975 மார்ச் 13]

சென்னை-தேவம்பட்டு பேருந்து வழித்தடம்.

*309—வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

சென்னையிலிருந்து தேவம்பட்டு செல்லும் 90-எ பேருந்துகள் அய நல்லூர் கிராமம் வரை சென்றுவர வழித் தடம் தரப்பட்டிருந்தும், சீராக அயநல்லூர் கிராமத்திற்கு சென்று திரும்புவதில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை. சென்னைக்கும் தேவம்பட்டுக்கும் இடையே 90-எ பேருந்து வழித்தடத்தில் ஓடுகின்ற பேருந்துகள், அயநல்லூர் வழியே தவருமல் சென்று வருகின்றன. அந்த வழித்தடத்தில் ஓடுகின்ற பேருந்துகள் சேருமிடத்தைக் காட்டும் பலகை களுள் "அயநல்லூர்" கிராமத்தின் பெயரைச் சேர்க்குமாறு கிளை நிர்வாகிக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இப்படி வழங்கப்பட இருக்கிற உத்தரவுக்கு நன்றி சொல்கிற நேரத்தில், இப்போது கூட சில நேரங்களில் அந்த 2,000 மக்கள் தொகை வாழும் அயநல்லூருக்கு அந்த பஸ் செல்லாமல் இருக்கிறது. ஆகவே, விரைவாக அந்த பெயர் பலகை யில்—வழி அயநல்லூர்—என்று எழுதப்படுமா என்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நன்றி சொன்னதற்கு நன்றி.

திருப்பூரில் பேருந்துப் பணி மனை.

*310—வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருப்பூரில் சேரன் போக்குவரத்துக் கழகப் பணிமனை எப் போது கட்டி முடிக்கப்படும் ?

(இ) அதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) திருப்பூரில் சேரன் போக்குவரத்துக் கழக பணிமனை பிப்ரவரி 1974-ல் கட்டி முடிக்கப்பட்டது.

(இ) நிலத்திற்கும் கட்டடத்திற்குமான மொத்த மதிப்பீடு ரூ. 1.27 இலட்சம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் பணி மனையில் இன்னும் நிறைய போக்குவரத்துக்களை விரிவுபடுத்தும் வாய்ப்பு இருப்பதால், கூடுதல் கட்டிடம் கட்டி, பெரிய வகையில் அந்தப் பணி மனையை—அது மாவட்டத்தின் மையப் பகுதியில் இருக்கிறது—விரிவு படுத்த அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய உத்தேசம் எது வும் இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இப்போது நடந்து கொண்டிருக்கிற போக்குவரத்துக் கழகத்தில் சேரன் போக்கு வரத்துக் கழகம் மிகவும் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. மேலிடத் தில் இருக்கிறது. அது நல்ல முறையில் இயங்கினாலும், அங்கே உள்ளபடி ஒர்க் ஷாப் பின்தங்கிய நிலையில் தான் இருக்கிறது. போதிய சக்தி இல்லாமல் இருக்கிறது. ரிப்பேர் செய்வதற்கான பொருள்கள் இல்லாமல் இருக்கிறது. அதனால் பழுதுபார்க்கும் வேலை சரிவர நடை பெறாமல் இருக்கிறது. ஆகவே, அந்த திருப்பூர் போக்குவரத்துப் பணி மனை பெரிய இடமாக இருப்பதாலும், மாவட்டத்தில் மையப்பகுதியில் அமைந்து இருப்பதாலும், அதை நல்ல முறையில் விரிவுபடுத்தி, ரிப்பேர் செய்யும் ஒர்க்-ஷாப்-திருப்பூர் நகரத்தின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து —என்ற முறையில் அமைத்துக் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அதற்கு முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பலத்த பீடிகை போட்டு அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பணிமனை இப்போது வந்துவிட்டது. மற்றவைகள் எல்லாம் அந்தப் போக்குவரத்துப் பணி மனை விரிவு ஆக ஆக கவனிக்கப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இம்மாதிரி சேரன் போக்குவரத்து, பாண்டியன் போக்குவரத்து என்று பல கார்ப்பரேஷன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் பல இடங்களில் டெப் போக்களை ஒதுக்கியிருக்கிறார்கள். இராமநாதபுரம் போன்ற சென்டர்களில் அப்படிச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே ஓடிக்கொண்டிருக் கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்கள்—அந்தப் பகுதிகளில் ஓடிக்கொண்டி ருப்பவை—அந்த டெப்போக்களில் பழுது பார்க்க முடியாமல் இருக்கின்றது. அந்த டெப்போக்களில் ரிப்பேர் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அல்லது ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் என்றே புதிய டெப்போக்கள் அமைக்கப் படுமா ? புதிய டெப்போக்கள் அமைக்கப்படும் வரை அங்கே ரிப்பேர் செய்துகொள்வதற்கு அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசுப் போக்குவரத்து பேருந்துகளை போக்குவரத்துக் கழக டெப்போக்களில் பழுது பார்ப்பதற்கு ஏற்கெனவே உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் போக்கு வரத்துக் கழகங்கள் பழுது பார்த்த பிறகு அதற்கான கட்டணத்தை அரசுத் துறையிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்கள்.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இப்போது அரசாங்கப் பணிமனைகளில் போதுமான பழுது பார்க்கும் வசதி இல்லாததால்—பல நேரங்களில் எனக்குக் கூட அனுபவம் ஏற்பட்டு இருக்கிறது—அவைகள் வழியில் நின்று விடுகின்றன. அவர்கள் சரியாக பழுது பார்க்காமல் எதோ ஒட்டவைத்துக் கொடுத்துவிடுகிறார்கள். மீண்டும் ஓடுகிறபோது வழி யில் நின்று விடுகிறது. இந்தக் காரணத்தால், நீண்டதூர பயணிகள்— அதுவும் இரவில் பயணம் செய்யும் பயணிகள்—மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, ஒர்க் ஷாப்புக்களில் திறன் பெற்ற ஊழியர்களை அமர்த்தி தேவை யான இயந்திரங்களையும் அமைத்து நல்லபடியாக பழுது பார்க்க ஆவண செய்யப்படுமா ?

1975 மார்ச் 13]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய குறைகள் ஏதேனும் இருக்குமானால், போக்குவரத்துத் துறை மானியத்தில் அது பற்றி தெரிவிப்பாரானால், அரசு நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும்.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது மாதிரி பஸ்கள் அடிக்கடி நடுவழியில் நின்று விடுவதால் பயணிகள் தொல்லை படுகிறார்கள். அதை நிவர்த்தி செய்வதற்கு ஆங்காங்கு மொபைல் ஒர்க் ஷாப் வைத்து, அதில் டெக்னீஷியன்களை வைத்தால் அதன் மூலம் அந்தப் பேருந்துகளை ரிப்பேர் செய்வதற்கு வசதி செய்து கொடுத்தால், அந்தக் கஷ்டங்கள் உடனடியாக நிவர்த்தியாகும். அது பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையிலே தான் நீண்டதூர போக்குவரத்துப் பேருந்துகளுக்கு இந்த வசதி செய்யலாமா என்பதை பரிசீலித்து வருகிறோம். அதற்கான உத்தரவு முதற்கட்டமாக பிறப்பிக்கப் பட்டுள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இப்போது அரசு போக்குவரத்து பேருந்துகளுக்கும், கழகப் பேருந்துகளுக்கும் இடையே ஒரு போட்டியே இருக்கிறது என்ற சந்தேகம் தோன்றும் விதத்தில் காரியங்கள் நடந்து வருகின்றன. இந்த மாதிரி நடப்பது சரியல்ல. அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் வழியில் நின்று விட்டாலோ, அல்லது கழகப் பேருந்துகள் — அண்ணா போக்குவரத்து, பெரியார் போக்குவரத்து— பஸ்கள் நின்று விட்டாலோ, மற்ற கழக பேருந்துகளில் அந்த நின்று விட்ட பஸ் பயணிகளை ஏற்றிக்கொள்வது இல்லை. இப்படிப்பட்ட நிலை இருப்பதால் பயணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதை சீரமைப்பு செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டிரான்ஸ்போர்ட் என்று வந்தால், எந்தக் கேள்வியும் கேட்டு விடலாமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : போட்டி இருப்பது என்றுமே நல்லது. ஆனால், பொறாமைதான் இருக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. நடைமுறைக் கேள்வி

விவசாய அமைச்சர் அளித்த ஒரு விடை குறித்து.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, கேள்வி நேரத்தில் 304-ம் கேள்விக்கு விவசாய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற போது, இது ஒரு புதிய திட்டம். அதாவது அஞ்சல் வழிப் பாடமுறை